1992 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி. இது ஆலங்குளம் பற்றியது.

திருமதி ரமணி நல்லதம்பி : தலைவர் அவர்களே, பீடிச் சுற்றும் தொழிலைச் செய்கிறவர்கள் 7 வயதிலிருந்தே அந்தத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். வறண்ட பகுதிகளிலே வாழ்கின்ற பெண்பிள்ளைகள் இதிலே அதிகமாக ஈடுபடுகின்ற காரணத்தாலே ஒரு சில ஆண்டுகளிலேயே இந்த நோய்க்கு அவர்கள் ஆளாகின்ற ஒரு வாய்ப்பு, நெல்லை மாவட்டம் போன்ற இடங்களில் பரவலாக காணப்படுகிறது. என்னுடைய தொகுதியிலேயும் அவ்வாறு நிலைமை இருக்கிறது. ஆகவே மொபைல் காச நோய் மருத்துவ மனை ஒன்று ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மொபைல் காச நோய் மருத்துவமனை எந்த அளவிற்குச் சிறப்பாக இயங்கும் என்பதை நம்மால் சொல்ல முடியாது. ஆங்காங்கே தேவையான அளவிற்கு இப்போது மருத்துவ மனைகள் இருகின்றன. எனவே அங்கேயே போய் எல்லா மருத்துவ வசதிகளையும் அவர்களால் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் மொபைல் என்று போட்டால் அவர்கள் அங்கே போகிறார்களா இல்லையா என்பது தெரியாது. இப்போது இருக்கிற மருத்துவமனைகளிலேயே வருகிறார்களா என்பதை கண்காணிப்பது மிகக் கடினமாக இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட யோசனை தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 125. திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன். மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர்,

125—

மயிலாடுதுறையிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து

*3475 திரு. எம் எம். எஸ். அபுல்ஹசன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை நகரிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து ஒன்று திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகத்தால் விட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து விடப்படும் ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பரிசீலனையில் இல்லை.

திரு. எம்.எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாயவரத்திற்கும் சென்னைக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலிருந்து சொகுசு பஸ் ஒன்று ஓடிக் கொண்டு இருந்தது. அது நல்ல லாபத்துடன் ஓடிக் கொண்டிருந்தது. சென்ற சர்க்கார் என்ன காரணத்தைக் கொண்டோ அதை முழுவதுமாக நிறுத்தி விட்டார்கள். மாயவரத்திற்கும் சென்னைக்கும் நீண்ட தூரமாக இருப்பதினால் அந்தப் போக்குவரத்தை மறுபடி பரிசீலனை செய்து என்னுடைய தொகுதி மக்கள் நலனைக் கருதி உடனடியாக அந்த பஸ்ஸை விடுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8 பேருந்துகள் 16 நடைகளில் அங்கே பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அந்தப் பேருந்துகள் இயக்கப்பட வேண்டும் என்று சொன்னால் ஒரு கிலோ மீட்டருக்கு 2 பைசா கூடுதலாக செலுத்த வேண்டியிருக்கிறது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 910 பேருந்துகள் தமிழகம் முழுவதும் இயங்கிக்கொண்டிருக்கிறது. சூப்பர் டீலக்ஸ் என்று சொல்லப்படுகிற பேருந்துகள் 140 பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். செமி டீலக்ஸ் என்று சொல்லப்படுகிற பேருந்துகள் 750 பேருந்துகளை நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முந்தைய ஆட்சிக் காலத்தில் அது நிறுத்தப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நிறுத்தப்பட்ட பேருந்துகள் எதுவாக இருந்தாலும் நம்முடைய தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவியின் ஆட்சியில் அது மீண்டும் இயக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியது போன்று எப்போது அதைச் செய்வார்கள்? உடனடியாகச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூப்பர் டீலக்ஸ் என்று சொல்லப்படுகிற பேருந்துகளை இன்னும் அதிகம் இயக்குவதற்காக நாம் இப்போது பாடிகளைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். விரைவாக உங்களுடைய கருத்துக்களை ஏற்று அந்தப் பேருந்துகள் இயக்கப்படும்.